1993 ஏப்ரல் 29]

நேரத்திலே சிறப்பான வைத்தியம் கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைக் கவர்ச்சிகரமாகச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரே ஏதாவது ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அதைப் பற்றி நாம் ஆலோசிக்கலாம்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 524. டாக்டர் க. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

524—

நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ், இரத்த சேமிப்பு வங்கி வசதி.

* 15652—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ். இரத்த சேமிப்பு வங்கி போன்ற வசதிகள் இல்லாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகளைச் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு .சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசின் தற்போதைய திட்டப்படி 50 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனைகளுக்குத் தான் இந்த வசதிகள் படிப்படியாக கொடுக்கப்படுகின்றன. அதற்குப் பின்பு தான் நன்னிலம் உட்பட மற்ற மருத்துவமனைகளுக்கு இந்த வசதிகளைக் கொடுப்பதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் பெரும்பாலான விளை நிலங்கள் இருப்பதனால் அங்குள்ள சாலைகள் எல்லாம் மிகவும் நேராக இல்லாமல் கோணல் மாண லாக இருப்பதனால் அங்கு அதிகப்படியான விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இது போல விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத் தில், அந்த நோயாளிகளைத் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கோ அல்லது அருகிலுள்ள நாகப்பட்டினம் பொது மருத்துவமனைக்கோ எடுத்துச் செல்லுகின்ற சூழ்நிலை உள்ளது. நன்னிலம் பகுதியில் உள்ள கிராமம் போன்ற பகுதி

களில் எல்லாம அந்த நோயாளிகளை எடுத்துச் செல்வதற்குப் போதிய வாகனங்கள் கிடைக்காததாலும், அப்பகுதியில் வாழ் கின்ற ஏழை எளிய மக்கள் அந்த வாகனங்களுக்குக் கொடுக்கக் கூடிய பணம் கூட கிடைக்காத சூழ்நிலையில் இறக்கக் கூடிய சூழ்நிலை எல்லாம் ஏற்படுகிறது. அது போன்ற ஒரு அவல நிலையைப் போக்குவதற்காக இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வருகின்ற ஆண்டிலேயாவது இந்த ஆம்புலன்ஸ் வண்டியைக் கொடுப்பதற்கு, அதேபோல அங்கு நன்னிலம் மருத்துவ மனையில் பலவேறு அறுவை சிகிச்சை நடைபெறுகின்ற இந்த நேரத்தில் அந்த மருத்துவமனைக்கு அந்த அறுவை சிகிச்சை நடப்பதற்கும், அவசரக் காலங்களில் இரத்தம் கொடுப்பதற்கு இரத்த வங்கியும் வரும் ஆண்டிலாவது ஏற்படுத்த முடியுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குக் கிடைத்த ஆய்வின்படி வளைந்து வளைந்து செல்லுகின்ற சாலையிலே ஏற்படுகின்ற விபத்தை விட, நேராக தடை இல்லாமல் செல்லுகின்ற சாலைகளிலே தான் விபத்துக்கள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன என்று ஆய்விலே தெரிகிறது. அதன் காரணத்தால் தான் நேஷனல் ஹைவேஸ் இப்படிப்பட்ட பகுதிகளிலே நாம் ஆம்புலன்ஸ்களை அதிகமாக வைத்திருக்கிறோம். இருந்தாலும் நன்னிலத்திலே ஒரு ஆம்புலன்ஸ் தேவை என்பதில் அரசாங்கத்திற்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால் அரசினுடைய நிதிப் பிரச்சினையை மனத்திலே வைத்துத்தான், ஒரு நார்ம்ஸ் வைத்து, 50 படுக்கைகளுக்கு மேலே இருக்கிற மருத்துவமனை யிலே முதலிலே படிப்படியாகக் கொடுத்துவிட்டு அதற்குப் பின்னாலே இதற்கெல்லாம் கொடுக்கலாம் என்று கருதப்பட்டது. 40 படுக்கைகள் தான் அங்கே இருக்கின்றன. அதே போன்று இரத்த வங்கியும் அவசியம் தான். ஆனால் நிதிப் பிரச்சினை தான் குறுக்கே இருக்கிறது. படிப்படியாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் உள்ள திருவாரூர் மருத்துவமனையில் கிட்டத் தட்ட 4 ஆம்புலன்ஸ் வண்டிகள் இருப்பதாகவும், அந்த 4 ஆம்புலன்ஸ் வண்டிகளில் ஒரு வண்டி வேலை செய்வதாகவும், மற்ற மூன்றும் வெறுமனே சும்மா இருப்பதாகவும் தெரிய வரு கிறது. அந்த மூன்று ஆம்புலன்ஸ்களையும் சிறிய ரிப்பேர் செய்தால் அதை இயக்கக் கூடிய நிலையில் இருக்கிறது என்றும் தெரிய வருகிறது. எனவே, அமைச்சரவர்கள் திருவாரூரில் இருந்து தற்சமயம் உபயோகப்படுத்துகின்ற வகையில் ஒரு ஆம்பு லன்ஸ் வண்டியை நன்னிலம் மருத்துவமனைக்குத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நான்கு ஆம்புலென்ஸ்கள் இருக்குமே யானால் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் இரண்டு தான் இருக்கிறது என்று சொல்லி, திருவாரூரைச் சேர்ந்த மாண்புமிகுஉறுப்பினர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். இரண்டு வண்டிகள்தான் இருக்கின்றன என்று தெரிவிக்கிறார்கள். எனவே, அங்கேயிருந்து வண்டியை அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்குமா என்று தெரியவில்லை. எனவே, தனியாக இதைப்பற்றி ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு நா. சா. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

525—

சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்க்க அனுமதி வழங்கல்.

*10616—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்க்க அரசு அனுமதி வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சந்தன மரங்களை தனியார் நிலங்களிலே வளர்க்க அரசு அனுமதி பெறத் தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தேக்கு மரங்கள் வளர்ப்பதிலே பல கம்பெனிகள் ஈடுபட்டிருப்பதைப்போல சந்தன மரத்தையும் தனியார் வளர்ப்பதற்கு அரசுக்குத் தடையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தடை இல்லை என்று சொல்வதை வர வேற்கிறேன். ஆனால், அந்தச் சந்தன மரம் வளர்ப்பது, எந்த முறையிலே வளர்க்க வேண்டும், சந்தன மரத்திற்கு வேண்டிய கன்றுகளை வன இலாக்காவின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கி இப்பொழுது சோஷ்யல் ஃபாரஸ்ட்ரி போன்ற திட்டங்கள் இருப்